ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1801/36 - 2013 මාර්තු මස 15 වැනි සිකුරාදා - 2013.03.15
*1801/36 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 11/2007.*

### 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்திச் சட்டம்

*2011 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்திச் சட்டத்தின் பிரிவு 1ஆ என்பதுடன் சேர்த்து வாசிக்கப்படும் சொல்லப்பட்ட சட்டத்தின் 95 ஆம் பிரிவின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

பெசில் ரோஹன ராஜபக்ஷ,
பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
*2013, மாச்சு 15.*

**ஒழுங்குவிதிகள்**

*1. இவ்வொழுங்குவிதிகள் 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கமநல அபிவிருத்தி (நட்டஈட்டுக் கொடுப்பனவு) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*2. (1) வாரப் பயிர்ச்செய்கையாளர் ஒருவராகக் கருதப்படும் எவரேனுமாள் சட்டத்தின் 1 அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு, (இதனகத்துப்பின்னர் "வாரப் பயிர்ச்செய்கையாளர் எனக் குறிப்பீடு செய்யப்படும்") சட்டத்தின் 1 ஆ என்னும் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் நட்டஈட்டுக்கான விண்ணப்பமொன்று செய்யுமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி அத்தகைய விண்ணப்பம் தொடர்பில் விசாரணையை நடத்துதல் வேண்டுமென்பதுடன் வாரப் பயிர்ச்செய்கையாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் உண்மைத்தன்மையை கருத்தில் கொண்டு நட்டஈட்டுக்கான கட்டளையை ஆக்குதல் தொடர்பில் தீர்மானித்தலும் வேண்டும்.*

*(2) ஆணையாளர் தலைமையதிபதியினால் சட்டத்தின் 1 ஆ என்னும் பிரிவின் கீழ் வாரப் பயிர்ச்செய்கையாளருக்கு நட்டஈடு செலுத்தப்படுதல் வேண்டும் எனத் தீர்மானிக்கப்படுமிடத்து பின்வருவனவற்றின் அடிப்படையில் அத்தகைய வாரப் பயிர்ச்செய்கையாளருக்கு நட்டஈட்டைச் செலுத்துவதற்கு, சட்டத்தின் ஏற்பாடுகளுக்குட்பட்டதாக கட்டளையை ஆக்குதல் வேண்டும் :-*

*(அ) பயிரிடப்பட்ட இயைபான நெற்காணிப்பரப்பில் செய்யப்பட்ட நெற்பயிர்ச் செய்கை போகங்களின் எண்ணிக்கை ;*

*(ஆ) இயைபான நெற்காணிப்பரப்பில் பயிர்ச்செய்கைக்காக வாரப் பயிர்ச் செய்கையாளரொருவரினால் உறப்படக்கூடிய கருதப்பட்ட செலவுகளை கழித்து இயைபான நெற்காணிப்பரப்பிலிருந்து பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்பட்ட விளைச்சல் ;*

ஆயின், எவ்வாறாயினும் ஒரு ஏக்கருக்கு செலுத்தப்படும் ஆகக்கூடுதலான நட்டஈட்டுத் தொகை இருநூறாயிரம் ரூபாவாதல் வேண்டும்.

ஆயின், மேலும் நட்டஈட்டுக் கொடுப்பனவுக்கான கணக்கிடப்பட்ட காலப்பகுதி பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்டதாகவிருத்தலாகாது.

3. சட்டத்தின் 12 ஆம் பிரிவின் நியதிகளின்படி நிலக்கிழாருக்கு வாரப் பயிர்ச்செய்கையாளரினால் செலுத்தப்படும் வாடகை நிலுவையாகவிருக்குமிடத்து, செலுத்தப்படாத வாடகைக்கான நெற்பயிர்ச்செய்கை போகங்களின் எண்ணிக்கையின் விகிதாசாரத்திற்கேற்ப நட்டஈடு குறைக்கப்படுதல் வேண்டும்.

4. (1) ஆணையாளர் தலைமையதிபதி நட்டஈட்டைச் செலுத்துவதற்கு ஆக்கிய கட்டளைகள் எவர் தொடர்பிலானதோ அவ்வாரப் பயிர்ச்செய்கையாளர்களின் பெயர்கள் பகிரங்க இடங்களில் காட்சிப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அதன்மீதான ஏதேனும் ஆட்சேபனைகள், அத்தகைய ஏதேனும் கட்டளையாக்கப்படுகின்ற ஒரு மாத காலப்பகுதிக்குள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு எழுத்தில் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(2) அத்தகைய கட்டளைக்கு ஏதேனும் ஆட்சேபனைகள் இருக்குமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதியானவர் கட்டளைக்கான ஆட்சேபனை கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாத காலப்பகுதியினுள் அத்தகைய கட்டளையை உறுதிப்படுத்தி அல்லது திருத்தி அவருடைய முடிபை ஆக்குதல் வேண்டும்.

(3) 2ஆம் ஒழுங்குவிதியின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை, (1) ஆம் பந்தியின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் ஆட்சேபனையின் மீது (2) ஆம் பந்தியின் கீழ் ஆணையாளர் தலைமையதிபதியானவர் அவருடைய முடிபை ஆக்கும்வரை பயன் கொடுக்கப்படுதல் வேண்டும்.

5. இவ்வொழுங்குவிதிகளில் -

"சட்டம்" என்பது, 2011 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்திச் சட்டம் ;

"ஆணையாளர் தலைமையதிபதி" என்பது சட்டத்தில் 38 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட கமநல அபிவிருத்தியின் ஆணையாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்.

3- 1148/1

---

ச.வ.பீ. 11/2007.

## 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்திச் சட்டம்

2011 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்தி சட்டத்தின் பிரிவு 1ஆ என்பதுடன் சேர்த்து வாசிக்கப்படும் சொல்லப்பட்ட சட்டத்தின் 95 ஆம் பிரிவின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

பெசில் ரோஹன ராஜபக்ஷ,
பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
2013, மாச்சு 15.

### ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கமநல அபிவிருத்தி (அடுத்துறுபவர்களின் நியமனம்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) சட்டத்தின் 1 உ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி வாரப் பயிர்ச்செய்கையாளரொருவரின் உரிமைகளுக்கு அடுத்துறுபவரொருவரின் நியமனத்திற்கான ஆவணமானது பொருளளவில் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள "அ" என்னும் படிவத்தில் இருத்தல் வேண்டும்.

(2) சட்டத்தின் 1 உ என்னும் பிரிவீன் (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி பயனுறுவதான வாரப் பயிர்ச்செய்கையாளரொருவரின் உரிமைகளுக்கு அடுத்துறுபவரொருவரின் நியமனத்தை இரத்துச் செய்வதற்கான ஆவணமானது பொருளளவில் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள "ஆ" என்னும் படிவத்தில் இருத்தல் வேண்டும்.

(3) சட்டத்தின் 1 உ என்னும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி நியமனத்தை இரத்துச் செய்தல் மற்றும் வாரப் பயிர்ச்செய்கையாளரொருவரின் உரிமைகளுக்கு புதிய அடுத்துறுபவரின் நியமனம் என்பவற்றிற்கான பொருளளவில் கூட்டு ஆவணமானது இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள "இ" என்னும் படிவத்தில் இருத்தல் வேண்டும்.

3. அடுத்துறுபவரை நியமித்தல், ஏதேனும் அத்தகைய நியமனத்தை இரத்துச் செய்தல் அல்லது நியமனத்தை இரத்துச் செய்து புதிய நியமனத்தைச் செய்யும் நோக்கத்திற்காக 5 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் ஆவணமானது சட்டத்தின் 1 உ என்னும் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி பதிவுக்கான ஆணையாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவர் அத்தகைய ஒவ்வொரு ஆவணத்தையும் -

(அ) தொடராக இலக்கமிடுதல் ;

(ஆ) ஆணையாளர் தலைமையதிபதியின் உத்தியோகபூர்வ இலச்சினையுடன் இணைத்தல் ; அத்துடன்

(இ) இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்க பதிவு செய்தல் வேண்டும்.

4. ஆணையாளர் தலைமையதிபதி அல்லது ஆணையாளர் தலைமையதிபதியால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர்-

(அ) சட்டத்தின் 1 உ என்னும் பிரிவின் (5) ஆம் உட்பிரிவீன் நியதிகளின் பிரகாரம் பதிவுக்கான ஆணையாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டதும் 5 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் ஆவணத்தின் விபரங்கள் அடங்கிய நாட்குறிப்பேட்டுப் புத்தகம் (இதனகத்துப்பின்னர் "நாட்குறிப்பேட்டுப் புத்தகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ; அத்துடன்

(ஆ) சட்டத்தின் 1 உ என்னும் பிரிவின் நியதிகளின் பிரகாரம் வாரப் பயிர்ச்செய்கையாளர்களினால் நியமிக்கப்பட்ட (இதனகத்துப்பின்னர் "அடுத்துறுபவர்களின் பதிவு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வாரப் பயிர்ச்செய்கையாளர்களின் அடுத்துறுபவர்களின் பெயர்கள் அடங்கிய பதிவேடு ஒன்றை வைத்திருத்தலும் பேணுதலும் வேண்டும்.

5. (1) நாட்குறிப்பேட்டுப் புத்தகமானது -

(அ) பொருளளவில் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவம் "ஈ" வில் இருத்தல் வேண்டும் ;

(ஆ) சட்டத்தின் 1உ என்னும் பிரிவின் (5) ஆம் உட்பிரிவீன் நியதிகளின்படி பதிவுக்கான ஆணையாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு ஆவணத்தின் சமர்ப்பிக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(2) நாட்குறிப்பேட்டுப் புத்தகத்தில் தரப்பட்டுள்ள சட்டத்தின் 1உ என்னும் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்கீழ் பதிவுக்காக சமரப்பிக்கப்பட்ட ஏதேனும் ஆவணமொன்றை உள்ளடக்கிய கடித உறையை திறக்கும் திகதி மற்றும் நேரம் என்பன அத்தகைய ஆவணத்தைச் சமர்ப்பித்த திகதி மற்றும் நேரம் எனக் கொள்ளப்படுதல் வேண்டும்.

6. (1) அடுத்துறுபவர்களின் பதிவேடானது -

(அ) பொருளளவில் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவம் "உ" வில் இருத்தல் வேண்டும் ;

(ஆ) தேவைப்படுத்தப்பட்டவாறான நெற்காணிகளின் பல்வேறு பிரிவுகள் தொடர்பில் பல்வேறு புத்தகங்களிலும் பல்வேறு தொகுதிகளிலும் இருக்கப்படலாம்.

(2) சட்டத்தின் 1உ என்னும் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் நியதிகளின் பிரகாரம் பதிவுக்கான ஆணையாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் ஆவணமானது முழுமையாக அல்லது பிரதானமாக அமைந்துள்ளவிடத்தில் பதியப்படவேண்டிய ஆவணம்

தொடர்பிலான நெற்காணி உள்ள பிரிவிற்காக ஒதுக்கப்பட்ட அடுத்துறுபவர்களின் பதிவிற்கான இயைபான புத்தகம் மற்றும் தொகுதி என்பவற்றில் பதிவு செய்யப்படுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும் அடுத்துறுபவரின் நியமனமொன்றை இரத்துச் செய்யும் நோக்கத்திற்காக அல்லது புதிய நியமனத்துடனான நியமனமொன்றை இரத்துச் செய்யும் நோக்கத்திற்காக பதிவு செய்யப்படவேண்டிய ஆவணமானது, நியமனத்தின் மூல ஆவணமானது, எத்தாளில் பதியப்பட்டதோ அப்பதிவு செய்யப்பட்ட தாளிலிருந்து எடுக்கப்பட்ட இயைபான தாளில் அத்தகைய ஆவணமானது பதிவு செய்யப்படுதல் வேண்டும் :

ஆயின், மேலும் ஆணையாளர் தலைமையதிபதி அவ்வாறு செய்தல் உசிதமாகவிருக்கும் என்று கருதினால் அத்தகைய ஏதேனும் ஆவணமானது புதிய பக்கத்தில் பதிவு செய்யப்படலாமென்பதுடன் சொல்லப்பட்ட நெற் காணிக்கு இயைபான நியமனத்தின் ஏதேனும் மூல ஆவணத்தின் முற்பதிவு தொடர்பில் தொடர்புக் குறிப்பொன்று செய்யப்படுதலும் வேண்டும்.

(3) பதிவு செய்யப்படவேண்டிய ஆவணம் தொடர்பிலான நெற்காணி தொடர்பில் ஆவணம் எதுவும் முன்னர் பதிவு செய்யப்படாதவிடத்து அத்தகைய நெற்காணிக்காக ஒதுக்கப்பட்ட புதிய பக்கத்தில் அத்தகைய ஆவணமானது பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(4) சட்டத்தின் 1உ என்னும் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் நியதிகளின் பிரகாரம் ஆணையாளர் தலைமையதிபதிக்கு பதிவுக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் ஆவணமானது, ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர் அடுத்துறுபவர்களின் பதிவில் இயைபான பதிவுகளைச் செய்வதன்மூலம் அத்தகைய ஆவணத்தை பதிவு செய்தல் வேண்டும் என்பதுடன் அடுத்துறுபவர்களின் பதிவில் செய்யப்பட்ட அத்தகைய பதிவுகளில் கையொப்பமிடுதலும் வேண்டும். உரிய ஆவணம் பதியப்பட்ட புத்தகம், தொகுதி மற்றும் பக்கம் என்பனவும் பதிவுத் திகதி மற்றும் இடம் என்பனவும் சொல்லப்பட்ட ஆவணத்தின் இரண்டு பிரதிகளிலும் கீழே குறிப்பிட்டவாறு புறக்குறிப்பிடப்படுதல் வேண்டும்.

கொழும்பில் 2013 ஆம் ஆண்டு .................................... ஆந்திகதியன்று,
(புத்தக இல. :........... மற்றும் தொகுதி இல.) :........................ இல் பதிவு செய்யப்பட்டது.

.....................................................
(ஆணையாளர் தலைமையதிபதி/
ஆணையாளர் தலைமையதிபதியால்
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்).

7. அடுத்துறுபவர்களின் பதிவில் பதிவிற்காக, சட்டத்தின் 1உ என்னும் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் கீழ் ஆணையாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட நெற்காணியின் விபரங்களானவை அதே நெற்காணி தொடர்பில் சொல்லப்பட்ட அடுத்துறுபவர்களின் பதிவில் செய்யப்பட்ட முற்பதிவில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட விபரங்களில் இருந்து வேறுபடுமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதியானவர் சொல்லப்பட்ட முற்பதிவு செய்யப்பட்டது தொடர்பில் அதே நெற்காணி தொடர்பிலான அத்தகைய ஆவணம் எனத் திருப்திப்படுவதன் மீது, சொல்லப்பட்ட நெற்காணி தொடர்பில் சொல்லப்பட்ட முற்பதிவு செய்யப்பட்ட அதே தாளில் அத்தகைய ஆவணத்தினைப் பதிவு செய்யலாம்.

8. பதிவேட்டுப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டவாறான சட்டத்தின் 1உ என்னும் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் கீழ் ஏதேனும் ஆவணத்தின் சமர்ப்பிக்கப்பட்ட திகதி மற்றும் நேரம் என்பன அடுத்துறுபவர்களின் பதிவில் அத்தகைய ஆவணத்தின் பதிவுத் திகதி மற்றும் நேரமாகக் கருதப்படுதல் வேண்டும்.

9. (1) இவ்வொழுங்குவிதிகளின் இப்பாகத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின் பிரகாரம் ஆணையாளர் தலைமையதிபதியினால் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் பதிவேடுகளை பரிசோதனை செய்வதற்கு எண்ணுகின்ற எவரேனுமாள் –

(அ) ஆணையாளர் தலைமையதிபதிக்கு பின்வரும் விபரங்களடங்கிய எழுத்திலான விண்ணப்பமொன்றைச் செய்வார்:-

(i) விண்ணப்பதாரியின் பெயர் மற்றும் முகவரி ;

(ii) நெற்காணியின் பெயர் மற்றும் அதன் பரப்பு ;

(iii) நெற்காணி அமைந்துள்ள பிரதேச செயலாளருடைய பிரிவு மற்றும் கிராமம் அல்லது நகரம் அத்துடன் கிராமம் அலுவலர் பிரிவு ;

(iv) நெற்காணியின் எல்லைகள் ; அத்துடன்

(ஆ) பரிசோதனையிடும் நேரத்தில் ஆணையாளர் தலைமையதிபதியால் அல்லது ஆணையாளர் தலைமையதிபதியால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் இரத்துச்செயயப்படும் விண்ணபத்திற்கான ஐந்து ரூபா பெறுமதிக்கான முத்திரைகளை ஒட்டுவதனூடாக கட்டணமொன்றைச் செலுத்துதல்.

(2) விண்ணப்பதாரியினால் அடுத்துறுபவர்களின் பதிவேட்டினைப் பரிசோதித்தலானது ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அதன் சார்பில் ஆணையாளர் தலைமையதிபதியால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரின் முன்னிலையிலன்றி நடத்தப்படுதலாகாது.

13. இவ்வொழுங்குவிதிகளில் -

"சட்டம்" என்பது 2011 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்திச் சட்டம்;

"ஆணையாளர் தலைமையதிபதி" என்பது சட்டத்தின் 38 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட கமநல அபிவிருத்தி ஆணையாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்.

## அட்டவணை

ஒழுங்குவிதி 2 (1)

## படிவம் "அ"

### அடுத்துறுபவரின் நியமனத்திற்கான ஆவணம்

இதற்கான அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்டதும் .................... என்னுமிடத்தை சேர்ந்த ................... என்பவருக்கு தற்போது உரித்தான ............................. என அழைக்கப்படும் நெற்காணிப் பரப்பின் வாரப் பயிர்ச்செய்கையாளராகிய .......................................... என்னுமிடத்தைச் சேர்ந்த ............... ஆகிய நான் இத்தால் ................... என்னுமிடத்தைச் சேர்ந்த .......................... என்பவரை எனது இறப்பின்போது அல்லது நிரந்தர ஊனமுற்றமையின்போது 2011 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்தி (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2000 ஆம் ஆண்டின் 46 ஆம்இலக்க, கமநல அபிவிருத்தி சட்டத்தின் கீழ், மேலே குறிப்பிடப்பட்ட நெற்காணியின் வாரப் பயிர்ச்செய்கையாளராகிய எனது உரிமைகளின் அடுத்துறுபவராக நியமிக்கின்றேன்.

....................................................
வாரப் பயிர்ச்செய்கையாளரின்
கையொப்பம்.

இரண்டு சாட்சிகளின் பெயர்களும் முகவரிகளும் :

1. ................................................................ கையொப்பம் ................................................................
2. ................................................................ கையொப்பம் ................................................................

2013, .......................... அன்று என் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது.

.......................................................................
நிருவாக மாவட்டத்தின் அரசாங்க அதிபர்/
பிரதேச செயலாளர் /காணிகளின் பதிவாளர்/
பிரசித்த நொத்தாரிசு/சமாதான நீதவான்.

## அட்டவணை

1. நெற்காணியின் பெயர் : ..............................................
2. நெற்காணியின் அமைவிடம் : ............................................
3. (அ) கிராமம் அல்லது நகரம் மற்றும் கிராம அலுவலர் பிரிவு : .............................................
   (ஆ) பிரதேச செயலாளருடைய பிரிவு : .............................................
   (இ) நிருவாக மாவட்டம் : .............................................

4. நெற்காணியின் எல்லைகள் :-
வடக்கு: ............................................
தெற்கு: ............................................
கிழக்கு: ............................................
மேற்கு: ............................................
5. பரப்பு : ............................................
6. இயைபான பகுதி: ............................................
7. நெற்காணி முழுமையாக அல்லது பிரதானமாக அமைந்துள்ள இடத்திலுள்ள விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளருடைய இடப்பரப்பு : ............................................
8. கமநல அபிவிருத்தி பேரவையின் பெயர் : ............................................

ஒழுங்குவிதி 2 (2)

### படிவம் "ஆ"

### அடுத்துறுபவரின் நியமனத்தை இரத்துச் செய்வதற்கான ஆவணம்

இதற்கான அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்டதும் .................... என்னுமிடத்தைச் சேர்ந்த .................. என்பவருக்கு தற்போது உரித்தாகவுள்ள ............................ என அழைக்கப்படும் நெற்காணிப் பரப்பின் வாரப் பயிர்ச்செய்கையாளராகிய ......................................... என்னுமிடத்தைச் சேர்ந்த ............... ஆகிய நான், எனது இறப்பு அல்லது நிரந்தர ஊனமுற்றமையின் போது 2011 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்தி (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்தி சட்டத்தின் கீழ், கீழே குறிப்பிடப்பட்ட நெற்காணியின் வாரப் பயிர்ச்செய்கையாளராகிய எனது உரிமைகளுக்கு உரித்தானவரான எனது அடுத்துறுபவராக ...................................... என்னுமிடத்தைச் சேர்ந்த ..................... என்பவரை ......................... என்னுமிடத்தில் ................................. அன்று ............................ முன்னிலையில் என்னால் செய்யப்பட்ட ஆவணத்தின் மூலம் செய்யப்பட்ட நியமனத்தை இத்தால் இரத்துச்செய்கின்றேன்.

.................
வாரப் பயிர்ச்செய்கையாளரின் கையொப்பம்.

இரண்டு சாட்சிகளின் பெயர்களும் முகவரிகளும் :

1. ................................................................ கையொப்பம் ................................................................
2. ................................................................ கையொப்பம் ................................................................

2013, .......................... அன்று என் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது.

.......................................................................
நிருவாக மாவட்டத்தின் அரசாங்க அதிபர்/
பிரதேச செயலாளர் /காணிகளின் பதிவாளர்/
பிரசித்த நொத்தாரிசு/சமாதான நீதவான்.

### அட்டவணை

1. நெற்காணியின் பெயர் : ............................................
2. நெற்காணியின் அமைவிடம் :-
(அ) கிராமம் அல்லது நகரம் மற்றும் கிராம அலுவலர் பிரிவு : ............................................
(ஆ) பிரதேச செயலாளருடைய பிரிவு : ............................................
(இ) நிருவாக மாவட்டம் : ............................................
3. நெற்காணியின் எல்லைகள் :-
வடக்கு: ............................................
தெற்கு: ............................................

கிழக்கு: .............................................
மேற்கு: .............................................

4. பரப்பு : .............................................
5. இயைபான பகுதி: .............................................
6. நெற்காணி முழுமையாக அல்லது பிரதானமாக அமைந்துள்ள இடத்திலுள்ள விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளருடைய இடப்பரப்பு : .............................................
7. கமநல அபிவிருத்தி பேரவையின் பெயர் : .............................................

ஒழுங்குவிதி 2 (3)

*படிவம் "இ"*

**அடுத்துறுபவரின் நியமனத்தை இரத்துச் செய்தல் மற்றும்**
**புதிய அடுத்துறுபவரின் நியமனம் என்பவற்றுக்கான கூட்டு ஆவணம்**

இதற்கான அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்டதும் .................... என்னுமிடத்தைச் சேர்ந்த ................... என்பவருக்கு தற்போது உரித்தான ........................... என அழைக்கப்படும் நெற்காணிப் பரப்பின் வாரப் பயிர்ச்செய்கையாளராகிய ......................................... என்னுமிடத்தைச் சேர்ந்த ............... ஆகிய நான், இத்தால் –

(அ) என்னுடைய இறப்பின் அல்லது நிரந்தர ஊனமுற்றமையின் போது 2011 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்தி (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்திச் சட்டத்தின் கீழ், கீழே குறிப்பிடப்பட்ட நெற்காணியின் வாரப் பயிர்ச்செய்கையாளராகிய எனது உரிமைகளுக்கு உரித்தாக்கப் படும் எனது அடுத்துறுபவராக நியமிக்கப்படும் ...................................... என்னுமிடத்தைச் சேர்ந்த ..................... என்பவரை ......................... என்னுமிடத்தில் .................................. முன்னிலையில் ............. அன்று என்னால் ஆக்கப்பட்ட ஆவணத்தினால் என்னால் செய்யப்பட்ட நியமனத்தை இரத்துச்செய்கின்றேன்; அத்துடன்

(ஆ) எனது இறப்பின் அல்லது அல்லது நிரந்தர ஊனமுற்றமையின் போது சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ், கீழே குறிப்பிடப்பட்ட நெற்காணியின் வாரப் பயிர்ச்செய்கையாளரான எனது உரிமைகளுக்கு உரித்தாக்கப்படக்கூடிய, எனது அடுத்துறுபவராக ................ எனுமிடத்தைச் சேர்ந்த ..................... என்பவரை நியமிக்கின்றேன்.

....................................................
வாரப் பயிர்ச்செய்கையாளரின்
கையொப்பம்.

இரண்டு சாட்சிகளின் பெயர்களும் முகவரிகளும் :

1. ................................................................. கையொப்பம் .................................................................
2. ................................................................. கையொப்பம் .................................................................

2013, .......................... அன்று என் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது.

.......................................................................
நிருவாக மாவட்டத்தின் அரசாங்க அதிபர்/
பிரதேச செயலாளர் /காணிகளின் பதிவாளர்/
பிரசித்த நொத்தாரிசு/சமாதான நீதவான்.

**அட்டவணை**

1. நெற்காணியின் பெயர் : .............................................
2. நெற்காணியின் அமைவிடம் :–
    (அ) கிராமம் அல்லது நகரம் மற்றும் கிராம அலுவலர் பிரிவு : .............................................
    (ஆ) பிரதேச செயலாளருடைய பிரிவு : .............................................
    (இ) நிருவாக மாவட்டம் : .............................................

3. நெற்காணியின் எல்லைகள் :-
வடக்கு: .............................................
தெற்கு: .............................................
கிழக்கு: .............................................
மேற்கு: .............................................
4. பரப்பு : .............................................
5. இயைபான பகுதி: .............................................
6. நெற்காணி முழுமையாக அல்லது பிரதானமாக அமைந்துள்ள இடத்திலுள்ள விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளருடைய இடப்பரப்பு : .............................................
7. கமநல அபிவிருத்தி பேரவையின் பெயர் : .............................................

ஒழுங்கு விதி 5 (1)

## படிவம் "ஈ"

## நாட்குறிப்பேட்டுப் புத்தகம்

| தொடரிலக்கம் 1 | பதிவுக்காக சமர்ப்பிக்கும் திகதி மற்றும் நேரம் 2 | ஆவணத்தில் கையொப்பமிடும் திகதி மற்றும் யார் முன்னியில் கையொப்பமிடப் பட்டது 3 | நியமனம், இரத்துச் செய்தல் அல்லது இரத்துச் செய்தலும் நியமனமும் ஆகிய இரண்டுமாயினுஞ் சரியினதான ஆவணத்தின் தன்மை 4 | பதிவு மற்றும் கட்டணம் 5 | காணிகளின் இயைபான எண்ணிக்கை 6 | இயைபான பகுதி 7 | பதிவின் பின்னர் ஆவணத்தை மீள ஒப்படைக்கும் திகதி 8 | வேறு விடயங்கள் ஏதேனும் இருப்பின் 9 |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |

ஒழுங்குவிதிகள் 6 (1)

## படிவம் "உ"

## அடுத்துறுபவர்களின் பதிவு

1. கமநல சேவைகள் நிலையம் : .............................................
2. நெற்காணி முழுமையாக அல்லது பிரதானமாக அமைந்துள்ள இடத்திலுள்ள விவசாய ஆராய்சி மற்றும் உற்பத்தி உதவியாளருடைய இடப்பரப்பு : .............................................
3. கிராமம் அல்லது நகரம் மற்றும் கிராம அலுவலர் பிரிவு : .............................................
4. பிரதேச செயலாளருடைய பிரிவு : .............................................
5. நிருவாக மாவட்டம் : .............................................
6. நெற்காணியின் பெயர் : .............................................
7. எல்லைகள் :-
வடக்கு: .............................................
தெற்கு: .............................................
கிழக்கு: .............................................
மேற்கு: .............................................
8. பரப்பு : .............................................

| தொடரிலக்கம் | பதிவுத் திகதி | சொந்தக்காரரின் பெயர் மற்றும் முகவரி | வாரப் பயிர்ச் செய்கையாளரின் பெயர் மற்றும் முகவரி | சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட அடுத்துறுபவரின் பெயர் மற்றும் முகவரி | சட்டத்தின் 1(உ) என்னும் உட்பிரிவின் கீழ் யாருடைய நியமனம் இரத்துச் செய்யப்பட்டதோ அவ்வடுத்துறுபவரின் பெயர் மற்றும் முகவரி | இயைபான பகுதி | ஆவணத்தைக் கையொப்பமிடும் திகதி மற்றும் யார் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது | ஆணையாளர் தலைமையதிபதியின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம் | வேறு விடயங்கள் ஏதேனுமிருப்பின் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* | *6* | *7* | *8* | *9* | *10* |
| | | | | | | | | | |

*3-1148/2*

---

*ச.வ.பீ. 11/2007*

**2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்திச் சட்டம்**

*2011 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2000, ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 39 ஆம் பிரிவின் (11) ஆம் உட்பிரிவு மற்றும் 42அ என்னும் பிரிவின் 13 ஆம் உட்பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய சொல்லப்பட்ட சட்டத்தின் 95 ஆம் பிரிவின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

பெசில் ரோஹன ராஜபக்ஷ,
பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
*2013, மாச்சு 15.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கமநல அபிவிருத்தி (விசாரணை நடவடிக்கை முறை) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

**பகுதி 1**

**கமநல நியாயசபைகளின் விசாரணை நடவடிக்கை முறை**

2. ஏதேனும் விண்ணப்பம், முறைப்பாடு அல்லது மேன்முறையீடு விசாரணைக்காக கமநல நியாயசபைக்கு செய்யப்படுமிடத்து அல்லது ஆற்றுப்படுத்தப்படுமிடத்து அத்தகைய ஏதேனும் விண்ணப்பத்துக்கு அல்லது முறைப்பாட்டுக்கு ஆணையாளர் தலைமையதிபதியால் கொடுக்கப்பட்ட விசாரணை இலக்கமானது விசாரணையின் வேறு பிரித்துக்காட்டும் இலக்கமாக பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அது தொடர்பான கட்டளைக்கிணங்க விசாரணைகள் நடாத்தப்படுதலும் வேண்டும்.

3. (1) கமநல நியாயசபைக்கு ஆற்றுப்படுத்தப்படும் விண்ணப்பம் அல்லது முறைப்பாடானது இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள ''அ'' என்னும் படிவத்தில் பொருளளவில் இருத்தல் வேண்டுமென்பதுடன் சத்தியக் கடதாசியொன்றுடன் இணைக்கப்படுதலும் வேண்டும்.

(2) கமநல நியாயசபைக்கு ஆற்றுப்படுத்தப்படும் மேன்முறையீடானது இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள "ஆ" என்னும் படிவத்தில் பொருளளவில் இருத்தல் வேண்டுமென்பதுடன் சத்தியக் கடதாசியொன்றுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

4. எழுத்துமூல அறிவித்தலொன்று, விசாரணைத் திகதிக்கு ஆகக் குறைந்தது பதினான்கு நாட்களுக்கு முன்னர் விண்ணப்பத்தின், முறைப்பாட்டின் அல்லது மேன்முறையீட்டின் திறத்தவர்களுக்கு அவர்களை சமுகமளிக்குமாறு வேண்டுகோள்விடுத்து பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்.

5. ஒழுங்கு விதி 4 இன் கீழ் அனுப்பப்படும் அறிவித்தலானது, விசாரணையின் விடயம், திறத்தவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள், விசாரணை நடைபெறும் திகதி, நேரம் மற்றும் இடம் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும்.

6. எவரேனும் கட்சிக்காரர் ஒழுங்குவிதி 4 இன் கீழ் அனுப்பப்பட்ட அறிவித்தலில் வழங்கப்பட்ட விசாரணை திகதி மற்றும் நேரத்திற்கு சமுகமளிக்காதவிடத்து சட்டத்தின் 39 ஆம் பிரிவின் (8) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், விசாரணையானது வேறு திகதிக்கு பிற்போடப்படலாமென்பதுடன் பிற்போடப்பட்ட விசாரணையின் திகதி, நேரம் மற்றும் இடம் என்பன திறத்தவர்களுக்கு எழுத்தில் பதிவுத் தபால் மூலம் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

7. ஒழுங்கு விதி 6 இல் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவித்தலில் விண்ணப்பதாரர், முறைப்பாட்டாளர் அல்லது மேன்முறையீட்டாளர் சமுகமளிக்காதுவிடின் மற்றும் அவர் அல்லது அவரின் பிரதிநிதி நியாயமான காரணமின்றி தீர்மானிக்கப்பட்ட நாளன்று விசாரணைக்கு சமுகமளிக்காதவிடத்து முறைப்பாடானது தள்ளுபடி செய்யப்படலாமென்பதுடன், பிரதிவாதியானவர் நியாயமான காரணமின்றி அத்தகைய நாளன்று சமுகமளிக்காதவிடத்தும் அவர் அல்லது அவரின் பிரதிநிதியானவர் சமுகமளிக்காதவிடத்து விசாரணையானது மறுதிறத்தவர் இல்லாத விசாரணையாக நடத்தப்படும் எனக் கூறப்படுதல் வேண்டும்.

8. விசாரணையெதுவும் பொதுவிடுமுறை ஒன்றில் நடத்தப்படுதலாகாது.

9. விசாரணையுடன் தொடர்புடைய விபரங்களின் நாட்குறிப்பேட்டுப் பதிவானது ஒவ்வொரு நாளினதும் நடவடிக்கைகள் தொடங்குவதற்கு முன்னர் செய்யப்படுதல் வேண்டும்.

10. கமநல நியாயசபையானது முதற் சந்தர்ப்பத்தில் திறத்தவர்களுக்கிடையே தீர்வு ஒன்றுக் பயனுறும் வகையில் அருமுயற்சியெடுத்தல் வேண்டுமென்பதுடன் தீர்வு காணல் பயனுறாதவிடத்து மட்டும் விடயத்தை தொடருதல் வேண்டும்.

11. கமநல நியாயசபையானது அதன் சார்பில் செய்யப்பட்ட எழுத்திலான விண்ணப்பத்தின் மீது, விண்ணப்பத்தினை, முறைப்பாட்டினை அல்லது மேன்முறையீட்டினை மீளப்பெறுவதற்கு அனுமதிக்கலாம். அத்தகைய சந்தர்ப்பத்தின் மீது கமநல நியாயசபையானது அதன்சொந்தத் தற்றுணிபின் மீது மற்றைய திறத்தவருக்குரிய செலவுகளைச் செலுத்துமாறு முறைப்பாட்டாளரை தேவைப்படுத்தலாம்.

12. திறத்தவரொருவர் பொருளளவில் இதற்கான அட்டவணையின் "இ" என்னும் படிவத்தில் உள்ள எழுத்திலான ஆவணமொன்றின் மூலம் தாமாக அல்லது அத்தகைய திறத்தவரினால் எவர் நியமிக்கப்படுகின்றாரோ அவருடைய பிரதிநிதி மூலம் விசாரணையில் பிரதிநிதித்துவப்படுத்தப்படலாம்.

13. ஒழுங்கு விதி 13 இன் நியதிகளின் பிரகாரம் செய்யப்பட்ட நியமனமொன்று பொருளளவில் இதற்கான அட்டவணையின் படிவம் "ஈ" விலுள்ள எழுத்திலான ஆவணமொன்றின் மூலம் இரத்துச் செய்யப்படலாம்.

14. திறத்தவர்களின் விசாரணையில் சான்று அளிக்கலாம் என்பதுடன் வேண்டுகோள் விடுக்கலாம். சாட்சிகளை அழைப்பதற்கு வேண்டுகோள் விடுத்த திறத்தவர் சாட்சிகளுக்கு அழைப்பாணை விடுக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும் கமநல நியாயசபையானது கருத்திற் கொள்ளப்படும் திறத்தவரினால் வாழ்வாதாரக் கொடுப்பனவு எனும் விடயத்தில் எவரேனும் சாட்சிக்கு அழைப்பாணைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

15. சாட்சியொருவரை குறுக்குவிசாரணை செய்தல் பிரதான சான்றை எடுத்ததன் பின்னர் அனுமதிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் மீள் விசாரணையானது அத்தகைய சாட்சிகளின் குறுக்கு விசாரணையின்போது எழுப்பப்பட்ட விடயங்கள் மீது மட்டும் அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

16. கமநல நியாயசபையானது அவசியமானவாறாகக் கருதப்படும் ஏதேனும் சான்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் ஏதேனும் விடயத்தினை தெளிவாக்குவதற்கு எவரேனும் திறத்தவரை அனுமதிக்கலாம்.

*17.* விசாரணையில் எவரேனும் திறத்தவரினால் அல்லது எவரேனும் சாட்சியாளரினால் சான்று கொடுக்கப்படுமிடத்து, அது எழுப்பப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆளுக்கு வாசித்து விளங்கப்படுத்தப்படுதலும் வேண்டும். அத்துடன் அதன் இறுதியில் "எனக்கு வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது" என்ற சொற்கள் உட்புகுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் சான்றுகொடுத்த ஆளின் கையொப்பத்தினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். அதன்பின்னர், கமநல நியாயசபையாகச் செயற்படும் ஆள் "என்முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது" என்னும் சொற்களை அடுத்து அவருடைய கையொப்பத்தினை இடுதல் வேண்டுமென்பதுடன் ஆவணத்தினை திகதியிடுதலும் வேண்டும்.

*18.* சான்றைக் கொடுக்கும் ஆளொருவர் அவர் வேண்டுகோள் விடுத்தால் அவரின் சொந்தச் சான்றை வாசிப்பதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில் "என்னால் வாசித்து விளங்கப்பட்டது" என்னும் சொற்கள் அவர் சான்றில் கையொப்பமிடுவதற்கு முன்னர் உட்புகுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் கமநல நியாயசபையானது ஆவணத்தை உறுதிப்படுத்தலும் வேண்டும்.

*19.* விசாரணையொன்றைப் பிற்போடும்போது திறத்தவர்களுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் நாட்குறிப்பேட்டுப் பதிவானது அவர்களால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

*20.* கமநல நியாயசபை, நியாயமான ஏதுக்களின் மீது திறத்தவர்களில் ஒரு திறத்தவரின் வேண்டுகோளின் பேரில் விசாரணையைப் பிற்போடலாம்.

*21.* விசாரணையின் முடிவில், திறத்தவர்கள் வாய்மூல அல்லது எழுத்துமூல சமர்ப்பணங்களைச் செய்வதற்கு தேவைப்படுத்தப்படலாமென்பதுடன் அதற்கு பயனுறும்வகையில் பதிவொன்று செய்யப்படுதல் வேண்டும்.

*22.* விசாரணைக்கோப்பானது கமநல நியாயசபையின் கட்டுக்காப்பில் இருக்கும் போது, நடவடிக்கைமுறையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளுக்காக வேண்டுகோள் விடுக்குமிடத்து, கமநல நியாயசபையின் செயலாளரானவர் அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை வழங்குவதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டுக்களைக் குறித்துரைக்கும் ஆணையாளர் தலைமையதிபதியினால் வெளியிடப்படும் சுற்றுநிருபங்களுக்கிணங்க அறவிடப்படும் கட்டணத்தின் கொடுப்பனவின் மீது அத்தகைய பிரதிகளை வழங்கச் செய்தல் வேண்டும்.

*23.* கமநல நியாயசபையின் முடிபானது பதிவுத் தபால் மூலம் ஆணையாளர் தலைமையதிபதிக்கும் இயைபான திறத்தவர்களுக்கும் அனுப்பப்படுதல் வேண்டும்.

*24.* விசாரணைக்கான திறத்தவரொருவர் கமநல நியாயசபையின் முடிபு கிடைக்கப்பெற்றதன் பின்னர் முப்பது நாட்களுக்குள் மீளாய்வுச் சபைக்கு மேன்முறையீடு செய்வதற்கு விரும்பாதவிடத்து இயைபான விசாரணையின் கோப்பானது ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

*25.* மேன்முறையீடானது கமநல நியாயசபையின் முடிவு தொடர்பில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் மீளாய்வு சபைக்கு விரும்பப்படுமிடத்து -

(அ) அத்தகைய மேன்முறையீட்டின் பிரதிகளானவை பதிவுத் தபால் மூலம் ஆணையாளர் தலைமையதிபதிக்கும் மற்றும் பிரதிவாதிக்கும் அனுப்பப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) இயைபான விசாரணையின் கோப்பானது கமநல நியாயசபையின் செயலாளரின் கட்டுக்காப்பில் வைக்கப்படுதல் வேண்டும்.

*26.* கமநல நியாயசபையின் செயலாளரானவர் -

(அ) அத்தகைய கமநல நியாயசபையின் கட்டளைகளை இயைபான திறத்தவர்களுக்கு அறிவித்தல் வேண்டும்;

(ஆ) அத்தகைய கமநல நியாயசபையின் அறிக்கைகள், ஆவணங்கள், கோப்புகள் மற்றும் எல்லா உபகரணங்களையும் அவரின் கட்டுக்காப்பில் வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் அவற்றின் பாதுகாப்பிற்கும் பொறுப்புடையவராதல் வேண்டும்;

(இ) விசாரணைகளின் நடவடிக்கைமுறைகளை உள்ளடக்கியதான விசாரணைக் கோப்பொன்றைப் பேணுதல் வேண்டும்;

(ஈ) விசாரணைக் கோப்பில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளுக்கான வேண்டுகோள்கள் தவிர்ந்த எல்லா விண்ணப்பங்கள், முறைப்பாடுகள் மற்றும் மேன்முறையீடுகளைக் கோப்பிடுதல் வேண்டும் ;

(உ) அத்தகைய கமநல நியாயசபைக்கு ஆற்றுப்படுத்தப்படும் விண்ணப்பங்கள், முறைப்பாடுகள் மற்றும் மேன்முறையீடுகள் தொடர்பில் கமநல நியாயசபையின் பணிப்புரைகளுக்கிணங்க இணங்கியொழுகுதல் வேண்டும்; அத்துடன்

(ஊ) விசாரணைக்கான எவரேனும் திறத்தவரினால் செய்யப்பட்ட வேண்டுகோளின் மீது கமநல நியாயசபையினால் நடாத்தப்பட்ட ஏதேனும் விசாரணையின் நடவடிக்கைமுறைகளின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை வழங்குவதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டுக்களைக் குறித்துரைக்கும் ஆணையாளர் தலைமையதிபதியினால் வழங்கப்படும் சுற்றுநிருபங்களுக்கிணங்க அறவிடப்படும் அத்தகைய கட்டணத்தின் கொடுப்பனவின் மீது அவற்றை வழங்குதல் வேண்டும்.

27. கமநல நியாயசபையானது ஒவ்வொரு மாதமும் ஆகக் குறைந்தது பதினைந்து நாட்கள் அதன் கூட்டங்களை நடத்துதல் வேண்டும்.

28. அதன் கூட்டங்கள் நடைபெறும்போது கமநல நியாயசபையின் பொது நிர்வாகத்தின் மீது ஆணையாளர் தலைமையதிபதியினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் சுற்றுநிருபங்கள் ஊடாக அறிவுறுத்தல்கள் வழங்கப்படலாம்.

## பகுதி II

### மீளாய்வுச் சபையின் நடவடிக்கை முறை

29. மீளாய்வுச் சபையானது முன்கூட்டியே ஒவ்வொரு காலாண்டுக்குமான அதன் கூட்டங்களின் திகதிகளைத் தீர்மானிக்கும்.

30. மீளாய்வுச் சபையின் செயலாளர் இதுவரை தீர்மானிக்கப்பட்ட திகதிகள், மேன்முறையீடுகளின் இலக்கங்கள் மற்றும் கட்சிக்காரர்களின் பெயர்களை காட்சிப்படுத்துதல் வேண்டும்.

31. மேன்முறையீட்டை விரும்புகின்ற பிணக்கொன்றின் எவரேனும் திறத்தவர், மனுவின் பிரதிவாதியாக அல்லது பிரதிவாதிகளாக பிணக்கின் மற்றைய திறத்தவரை அல்லது திறத்தவர்களை குறிப்பிட்டுக்காட்டுதல் வேண்டும்.

32. மேன்முறையீட்டின் ஏதேனும் மனுவானது மீளாய்வுச் சபையின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

33. மீளாய்வுச் சபைக்கு ஆற்றுப்படுத்தப்படும் மேன்முறையீடொன்று பொருளளவில் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவம் "உ" வில் இருத்தல் வேண்டும் என்பதுடன் சத்தியக் கடதாசியொன்றுடன் இணைக்கப்படுதலும் வேண்டும்.

34. மேன்முறையீட்டு மனுவின் பிரதிகள் மேன்முறையீட்டாளரால் ஆணையாளர் தலைமையதிபதிக்கும் மற்றும் பிரதிவாதி அல்லது பிரதிவாதிகளுக்கும் பதிவுத் தபால் மூலமும் அனுப்பப்படுதல் வேண்டும்.

35. மேன்முறையீட்டு விண்ணப்பம் ஒவ்வொன்றும் 50.00 ரூபா பெறுமதியுடைய முத்திரைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

36. மீளாய்வுச் சபையின் செயலாளர் மேன்முறையீட்டு விண்ணப்பத்தின் ஒவ்வொரு பக்கத்தின் மீதும் திகதியுடனான இலச்சினை இடுதல் வேண்டுமென்பதுடன் அதன் கிடைக்கப்பெற்ற திகதியன்று அதிலேயே தலைப்பிடுதலும் மற்றும் அத்தகைய கிடைக்கப்பெற்ற திகதியின் பதினான்கு நாட்களினுள் மீளாய்வுச் சபைக்கு அத்தகைய மேன்முறையீட்டு மனுவின் பற்றுச்சீட்டு இணைக்கப்படுதலும் வேண்டும்.

37. மேன்முறையீட்டு மனுவிற்கு ரூபா 50.00 பெறுமதியுடைய முத்திரைகள் ஒட்டப்படாதிருப்பின் மீளாய்வுச் சபையின் செயலாளர் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படும் கடிதத்தின் மூலம் மேன்முறையீட்டாளருக்கு அதனை அறிவித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கடிதம் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் மனுவிற்கு 50.00 ரூபா பெறுமதியுடைய முத்திரைகள் ஒட்டத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

38. செயலாளரானவர் கமநல நியாயசபையிலிருந்து மேன்முறையீடு தொடர்பிலான விசாரணைக்கோப்பினை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

39. மேன்முறையீட்டாளர் அல்லது பிரதிவாதி அல்லது பிரதிவாதிகள் விடயத்திற்கேற்ப தாமாக அல்லது அவருடைய பிரதிநிதி மூலம் மீளாய்வுச் சபைக்குமுன்பு கூற்றுக்களைச் செய்யலாம்.

40. மேன்முறையீட்டாளர் அல்லது எவரேனும் திறத்தவர் மீளாய்வுச் சபைக்குமுன்னர் தோன்றுவதற்கு பிரதிநிதியொருவரை நியமிக்கலாம்.

41. கமநல நியாயசபையாக நியமிக்கப்பட்ட ஆளொருவர் மீளாய்வுச் சபைக்கு முன்னர் அழைக்கப்படுதல் ஆகாது.

42. மீளாய்வுச் சபையின் பெரும்பான்மை உறுப்பினர்களின் முடிபானது மீளாய்வுச் சபையின் முடிபாகக் கருதப்படுதல் வேண்டும்.

43. மீளாய்வுச் சபை ஏதேனும் மேன்முறையீட்டின் மீதான அதன் முடிபுக்கான காரணங்களைக் கொடுத்தல் வேண்டுமென்பதுடன் உடன்படாத எவரேனும் உறுப்பினர் அவருடைய ஏற்காத தன்மைக்குரிய காரணங்களைக் கொடுக்கலாம்.

44. மீளாய்வுச் சபையின் முடிபுகள் மேன்முறையீட்டின் செயலாளர் மூலம் ஒவ்வொரு திறத்தவருக்கும் ஆணையாளர் தலைமையதிபதிக்கும் பதிவுத் தபால் மூலம் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

45. மீளாய்வுச் சபையின் செயலாளரானவர் -

(அ) அத்தகைய மீளாய்வுச் சபையின் கட்டளைகளை ஒவ்வொரு திறத்தவருக்கும் அறிவித்தல் வேண்டும் ;

(ஆ) மீளாய்வுச் சபையின் அறிக்கைகள், ஆவணங்கள் மற்றும் எல்லா உபகணரங்களையும் கட்டுக்காப்பில் வைத்திருத்தல் வேண்டும் ;

(இ) மீளாய்வுச் சபையால் நடத்தப்படும் எல்லா மேன்முறையீட்டு விசாரணைகளின் பதிவேடுகளைப் பேணுதல் வேண்டும்;

(ஈ) அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளுக்கான வேண்டுகோள்கள் தவிர எல்லா மேன்முறையீட்டு மனுக்களையும் கோப்பிடுதல் வேண்டும் ;

(உ) அத்தகைய மீளாய்வுச் சபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டு மனு தொடர்பில் மீளாய்வுச் சபையின் பணிப்புரைகளுக்கிணங்க செயற்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஊ) அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை வழங்குவதற்காக அறவிடப்படும் கட்டணங்கள் மற்றும் வழங்கப்படும் பற்றுச்சீட்டுக்கள் என்பவற்றைக் குறித்துரைக்கும் ஆணையாளர் தலைமையதிபதியால் வெளியிடப்படும் சுற்றுநிருபங்களுக்கிணங்க விதிக்கப்படும் அத்தகைய கட்டணத்தின் கொடுப்பனவின் மீது, மேன்முறையீட்டுக்கான எவரேனும் திறத்தவரினால் செய்யப்பட்ட வேண்டுகோளின் மீது மீளாய்வுச் சபையினால் கொண்டு நடாத்தப்படும் மேன்முறையீடுகளின் நடவடிக்கை முறைகளின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை வழங்குதல் வேண்டும்.

46. மேன்முறையீடொன்றைக் கொண்டு நடாத்தும் நோக்கத்திற்காக இயைபான மாவட்டத்தின் ஆணையாளர் தலைமையதிபதியால் அல்லது உதவி ஆணையாளரால் மீளாய்வுச் சபைக்கு சமர்ப்பித்த ஆவணங்களானவை அத்தகைய மேன்முறையீடு கொண்டு நடாத்தப்பட்டதன் முடிவின் பின்னரான முப்பது நாட்களுக்குள்ளாக இருக்குமிடத்து ஆணையாளர் தலைமையதிபதிக்கு அல்லது அத்தகைய உதவி ஆணையாளருக்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்.

47. இவ்வொங்கு விதிகளில் -

"சட்டம்" என்பது 2011 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்திச் சட்டம் எனப் பொருள்படும்.

"கமநல நியாயசபை" என்பது சட்டத்தின் பிரிவு 39 இன் கீழ் நியமிக்கப்பட்ட கமநல நியாயசபை எனப் பொருள்படும் ;

"மீளாய்வுச் சபை" என்பது சட்டத்தின் 42அ என்னும் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட மீளாய்வு சபை எனப் பொருள்படும் ;

"ஆணையாளர் தலைமையதிபதி" என்பது சட்டத்தின் 38 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட கமநல அபிவிருத்தி ஆணையாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்.

**அட்டவணை**

*ஒழுங்குவிதி 3*

**படிவம் "அ"**

*2011 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்தி சட்டத்தின் பிரிவின் கீழ், கமநல நியாய சபைக்கு செய்யப்பட்ட /ஆற்றுப்படுத்தப்பட்ட விண்ணப்பம்/முறைப்பாடு.*

.................................
.................................
.................................
*விண்ணப்பதாரர்/முறைப்பாட்டாளர்*
.................................
.................................
.................................
*பிரதிவாதி*

*விசாரணை இல. :........................*
*(ஆணையாளர் தலைமையதிபதியால் குறித்தளிக்கப்பட வேண்டியது)*

☐

*(100 ரூபா பெறுமதியுடைய முத்திரை)*

*20.................... அன்று,*

.............................. *எனும் இடத்தில்.*

1. *செய்யப்பட்ட அல்லது ஆற்றுப்படுத்தப்பட்ட விண்ணப்பம் /முறைப்பாடு 2011 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்திச் சட்டத்தின் பிரிவு/ பிரிவுகள்:* .......................................

2. *எந்நிகழ்வுகள் மீது விண்ணப்பம்/ முறைப்பாடு அடிப்படையாக உள்ளதோ அவ்வடிப்படையின் மீதான நிகழ்வுகள் :* .............................................

3. *விண்ணப்பத்துடன்/முறைப்பாட்டுடன் இணைக்கப்படும் ஆவணங்கள் :-*

   (i) ...............

   (ii) ...............

   (iii) ...............

4. *அழைப்பாணை விடுவிக்கப்பட வேண்டிய திறத்தவர்/திறத்தவர்கள்:* ............................

............................................
*விண்ணப்பதாரி/முறைப்பாட்டாளரின் கையொப்பம்.*

ஒழுங்கு விதி 3 (2)

**படிவம் "ஆ"**

*2011 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கச், சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்திப் பேரவையின் ............................ என்னும் பிரிவின் நியதிகளின் பிரகாரம் கமநல நியாய சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடு.*

.................................
.................................
.................................
மேன்முறையீட்டாளர்.
.................................
.................................
.................................
பிரதிவாதி

விண்ணப்ப/முறைப்பாட்டு இல. : .......................
கமநல நியாயசபையின் விசாரணை இல. : ...............................
(ஆணையாளர் தலைமையதிபதியால் குறித்தளிக்கப்பட வேண்டியது)

(100 ரூபா பெறுமதியுடைய முத்திரை)

20.................... அன்று,
.............................. எனும் இடத்தில்.

1. ....................................... என்னுமிடத்தைச் சேர்ந்த ....................................... என்பவராகிய நான், ................................ பிரதி ஆணையாளர் / உதவி ஆணையாளரால் தீர்மானிக்கப்பட்ட 2011 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்திச் சட்டத்தின் ............................ என்னும் பிரிவின் கீழ், கமநல சேவைகளின் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் /முறைப்பாட்டு இலக்கம் ..................... என்பதின் விண்ணப்பதாரி/முறைப்பாட்டாளர்/பிரதிவாதியாவேன்.

2. நான், இவ்விண்ணப்பம்/முறைப்பாட்டுக்கான விவசாயக் காணியானது ........................ கமநல நியாயசபையின் அதிகாரத்தின் இடப்பரப்பினுள் அமைந்துள்ளது என்பதை வெளிப்படுத்துகின்றேன்.

3. மேலே குறிப்பீடு செய்யப்பட்ட விண்ணப்பம்/முறைப்பாட்டு இல. .................... என்பதன் முடிபானது எனக்கு ........... அன்று அறிவிக்கப்பட்டது.

4. சொல்லப்பட்ட முடிபால் பாதிக்கப்பட்டவராகிய நான் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள சத்தியக் கடதாசியில் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளின் மீது இம்மேன்முறையீட்டைச் சமர்ப்பிக்கின்றேன்.

................................
விண்ணப்பதாரியின் / முறைப்பாட்டாளரின் /
பிரதிவாதியின்/திறத்தவரின் கையொப்பம்.

ஒழுங்கு விதி 12

**படிவம் "இ"**

**பிரதிநிதியொருவரின் நியமனம்**

.............. ஆகிய நான், 2011 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கச், சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் நடாத்தப்பட்ட கமநல நியாயசபைக்கு முன்னரான விசாரணை இல. ............................................/

நடவடிக்கைகளில் எனது பிரதிநிதியாக செயற்படுவதற்கு திரு./ திருமதி/ செல்வி .................................. என்பவரை இத்தால் நியமிக்கின்றேன்.

................................
விண்ணப்பதாரர்/ முறைப்பாட்டாளர்/ பிரதிவாதி/
திறத்தவர்/ மேன்முறையீட்டாளர்.

திகதி : ...........................

ஒழுங்கு விதி 13

## படிவம் "ஈ"

### பிரதிநிதியொருவரின் நியமனத்தை இரத்துச் செய்தல்

.............. ஆகிய நான், 2011 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கச், சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் நடாத்தப்பட்ட கமநல நியாய சபைக்கு முன்னரான விசாரணை இல. ..................../நடவடிக்கைகளில் எனது பிரதிநிதியாக செயற்படுவதற்கு திரு./திருமதி/செல்வி ................................. என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட அதிகாரத்தை இத்தால் இரத்துச் செய்கின்றேன்.

................................
விண்ணப்பதாரர்/ முறைப்பாட்டாளர்/ பிரதிவாதி/
திறத்தவர்/ மேன்முறையீட்டாளர்.

திகதி : ...........................

ஒழுங்கு விதி 33

## படிவம் "உ"

2011 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கச், சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 42 ஆம் பிரிவின் நியதிகளின்படி மீளாய்வுச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடு.

................................
................................
................................
மேன்முறையீட்டாளர்.
................................
................................
................................
பிரதிவாதி

கமநல நியாயசபையின் விசாரணை இல. : ...............................

2013 .................... அன்று,
............................. எனும் இடத்தில்.

2011 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்தி (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்திச் சட்டத்தின் ............................. என்னும் பிரிவின் நியதிகளின்படி .......................... அன்று கமநல நியாயசபையின் முடிபினால் பாதிக்கப்பட்டவராகிய நான், இதனுடன் இணைக்கப்பட்ட சத்தியக்கடதாசியில் குறிப்பிடப்பட்ட ஏதுக்களின் மீது மீளாய்வுச் சபைக்கு மேன்முறையீட்டு விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கின்றேன்.

................
மேன்முறையீட்டாளரின் கையொப்பம்.

3-1148/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.